
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1153**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**164**

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# சதுப்பேரி ஏரி படகு குழாம்; வேலூர் மக்களின் விடுமுறைக் கொண்டாட்டம்!

வேலூர் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட சேண்பாக்கம் பகுதியில் அமைந்திருக்கும் நீர்நிலை சதுப்பேரி ஏரி. 250 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்து, பல ஆண்டுகளாக கண்டுகொள்ளப்படாமல் இருந்த நீர்நிலை, இன்று வேலூர் மாநகரத்தின் முக்கிய சுற்றுலாத்தலமாக, விடுமுறை நாட்களில் மக்கள் குவியும் படகு குழாமாக மாற்றம் பெற்று வேலூர் மாவட்ட மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டு திராவிட மாடல் ஆட்சிக்காலத்தில், சீரமைக்கப்பட்ட நீர்நிலைகள் வரிசையில், வேலூர் சதுப்பேரி ஏரியையும் சீரமைத்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்ததை, திராவிட மாடல் ஆட்சியின் சாதனை மகுடமாக, வேலூர் மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

ஆந்திராவில் இருந்து பாலாற்றின் கிளை நதியான கவுண்டினியா நதி, இருமாநில எல்லைப்பகுதியில் உள்ள மோர்தானா அணையில் நிரம்பினால், வலதுபுற கால்வாய் மூலம் பள்ளிகொண்டா வழியாக சதுப்பேரிக்கு தண்ணீர் வந்து சேரும்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 10 ஆண்டு காலமாக அந்தக் கால்வாய்



- ரூ.19 கோடி மதிப்பீடு
- ஏரியின் நடுவே இரண்டு செயற்கைத் தீவுகள் - தீவுக்குச் செல்ல படகு சவாரி

தூர்வாரப்படாமல் இருந்த நிலையில், மழைக் காலத்தில்கூட சதுப்பேரி ஏரிக்கு தண்ணீர் கொண்டு வர முடியாத நிலை இருந்தது. பொதுமக்களும், கழகத்தின் சார்பிலும், மாவட்ட ஆட்சியரிடமும் பொதுப்பணித்துறை செயலாளரிடம் பலமுறை மனுக்கள் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதைக் கண்டித்து, 2020-ஆம் ஆண்டில், கழகத்தின் சார்பில் வேலூர் பொதுப்பணித்துறை அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2021-ஆம் ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினரான ஏ.பி.நந்தகுமார், அதுதொடர்பாக சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தார்.

வேலூர் மாவட்டத்தில், பொதுமக்களும் சுற்றுலா பயணிகளும் பயன்பெறும் வகையில், சுற்றுலாத்தலமாக **வேலூர் கோட்டையும், அமிர்தி உயிரியல் பூங்காவும்** உள்ளன. இங்குதான் சுற்றுலாப் பயணிகளும், பொது மக்களும் தங்களுடைய விடுமுறை தினத்தில் சென்று வருகின்றனர். ஆகவே, வேலூர் மாவட்டத்தில் புதிய சுற்றுலா தலம் அமைக்கப்பட வேண்டும் என்பது, வேலூர் மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது.

ஆகவே, வேலூர் சேண்பாக்கம் அருகில் அமைந்துள்ள சதுப்பேரி ஏரியைச் சீரமைக்க வேண்டும் என அவர், எழுப்பிய கோரிக்கையை ஏற்று, உடனடியாக பணிகளைத் தொடங்கியது அரசு.

ஏரியின் கரைகள் பலப்படுத்தப்பட்டதுடன், 1.5 கிலோ மீட்டர் நீளத்துக்கு, பொதுமக்கள் நடைப்பயிற்சியை மேற்கொள்ள நடைபாதை அமைக்கப்பட்டது. நடைபாதையில் இரண்டு புறங்களிலும் தடுப்புக்கம்பிகள் அமைக்கப்பட்டு, மின் விளக்குகள் அழகுற அமைக்கப்பட்டன.

சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக, ஏரியின் உள்ளே இரண்டு செயற்கைத் தீவுகள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் ஓய்வெடுப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, உள்ளூர் மற்றும் புலம்பெயரும்








**ச**துப்பேரிப் பூங்கா மற்றும் ஏரியில் படகு சவாரி செய்ய, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அனுமதிக்கப்படுகிறது. படகு சவாரி செய்வதற்கு கட்டணமாக ஒருவருக்கு ரூ.100.



### சீரமைப்புப் பணிகள்

நீர்வளத்துறை சார்பில், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டன. முதற்கட்டமாக, சதுப்பேரியில் இருந்து 6.5 மீட்டர் ஆழத்துக்கு வண்டல் மண் அகற்றப்பட்டு, ஏரியை ஆழப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டன. இதன்மூலம், மழைக்காலங்களில் கூடுதலாக மழைநீரைச் சேமிக்கத் திட்டமிடப்பட்டது.

> **வேலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மட்டுமல்ல, சூழலியல் நோக்கிலும் பயன்பாட்டு நோக்கிலும் சிறந்த அடையாளமாக உருவாகியுள்ளது இந்த சதுப்பேரி ஏரி.**



பறவைகளை ஈர்க்கும் நோக்கத்துடன், அந்த தீவுப்பகுதியில் தோட்டக்கலைத் துறை சார்பாக மரம், செடிகள் நடப்பட்டுள்ளன.

ஏரிக்கரையின் அருகிலேயே குழந்தைகள் விளையாடுவதற்கு, விளையாட்டுப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. ஏரியின் முழு அழகையும் காண, காட்சி முனை ஆகியவையும் அமைக்கபப்பட்டுள்ளன.

அனைத்துப் பணிகளும் முடிவடைந்த நிலையில் மார்ச் 13-ஆம் தேதி, வேலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் இந்த ஏரியைச் சீரமைக்க குரல்கொடுத்து வந்த சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் ஆகியோர் பங்குபெற, இந்த சுற்றுலா மையம் கழகத்தின் பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களால் பொது மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

வேலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மட்டுமல்ல, சூழலியல் நோக்கிலும் பயன்பாட்டு நோக்கிலும் சிறந்த அடையாளமாக உருவாகியுள்ளது இந்த சதுப்பேரி ஏரி. கடந்த சில நாட்களுக்கு முன், ரம்ஜான் விடுமுறை அன்று ஆயிரக்கணக்கான மக்கள் சதுப்பேரியில் குவிந்து, இந்த மாற்றத்தைக் கண்டு வியப்படைந்துள்ளனர். வேலூர் மக்களின் புதிய சுற்றுலா மையமாக உருவாகியுள்ள இந்த 'ஸ்பாட்', மக்களே எதிர்பாராதது. எதிர்பாராததையும் செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

...சாதனை தொடரும்

## வேட்பாளர்கள் தேர்விலேயே வென்றுவிட்டது தி.மு.க!

தி.மு.க. அமைச்சர்கள் போட்டியிடும் பல தொகுதிகளில் நேரடியாக போட்டியிட விரும்பாமல், கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கியிருக்கிறது அ.தி.மு.க. இது, அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு உள்ளேயே அதிருப்தியை ஏற்படுத்தி, ஊடகங்களில் விவாதமாகியிருக்கிறது. ஆனால், தனது கூட்டணிக் கட்சிகளுக்கு உரிய தொகுதிகளை நியாயமான முறையில் ஒதுக்கியிருக்கிறது, தி.மு.க. என சமூக வலைதளங்களில் கழகத்தின் திட்டமிடலுக்கு, வாழ்த்துமழை பொழிகிறது.

குறிப்பாக, திருவொற்றியூரில் கடந்த தேர்தலில் தி.மு.க. 38,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றது. பத்மநாபபுரத்தில் கடந்த முறை 27,000 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வென்றது. பழனியில் கடந்த இரண்டு தேர்தல்களிலும் 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. தி.மு. கழகம் பலமாக இருக்கும் இத்தொகுதிகளை சி.பி.எம். கட்சிக்கு இம்முறை ஒதுக்கியுள்ளது. இதுபோல ஒவ்வொரு கூட்டணிக் கட்சிக்கும், அவர்களையும் வெற்றிபெறச் செய்யும் விதமாகவே தொகுதிகளை பார்த்துப்பார்த்து ஒதுக்கியுள்ளது தி.மு.க.

அதேபோல அவிநாசி தொகுதியில் அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த 28 வயதே நிரம்பிய மருத்துவர் கோகிலாமணி களமிறக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே 4 இஸ்லாமிய கட்சிகளுக்குக் கூட்டணியில் இடம் ஒதுக்கியுள்ள கழகம், கட்சி சார்பிலும் 4 இஸ்லாமியர்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ளது. மறுமுனையில் அ.தி.மு.க.வுடன் இணைந்து போட்டியிட எந்த இஸ்லாமிய கட்சியும் தயாராக இல்லை. அ.தி.மு.க.வும் தன் கட்சி சார்பில் ஒரேயொரு இஸ்லாமியரை மட்டுமே வேட்பாளராக்கி, சிறுபான்மை யினருக்கு இழைக்கும் துரோகத்தைத் தொடர்கிறது.

ஒட்டுமொத்தமாக கழகத்தின் சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்களில் 15 பேர் மருத்துவர்கள், 17 பேர் பொறியாளர்கள், 29 பேர் வழக்கறிஞர்கள், 7 பேர் முனைவர்கள், 125 பேர் பட்டதாரிகள். 60-க்கும் மேற்பட்ட புதுமுகங்களுக்கு வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது. எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பது ஆட்சிக்கு மட்டுமல்ல, கட்சிக்கும்தான் என்பதை மெய்ப்பித்துள்ளது வேட்பாளர் பட்டியல். வேட்பாளர்கள் தேர்விலேயே வென்றுவிட்டது தி.மு.கழகம்.

## ஃப்ளாஷ்பேக்



### 36 ஆண்டுகளை நினைவூட்டும் படம்!



ப.குமாரசாமி

1989-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், இளைஞர் அணி நிகழ்ச்சிகளில் பங்கேற்க கரூர் வருகை தந்தார். அப்போது, பல தோழர்கள் தலைவருக்குப் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்த நிலையில், நான் புத்தகங்களைப் பரிசாக வழங்கினேன். தலைவர் முகம் மலர்ந்து பெற்றுக்கொண்டார். அருகில், அன்பில் பொய்யாமொழி. உடனிருந்த மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நன்னியூர் இராசேந்திரன், 'பகுத்தறிவு' ஆசிரியர் அணித் தலைவர் குமாரசாமி என என்னை அறிமுகம் செய்து வைத்தார். அன்றாடம் காணும் இந்தப் படம் 36 ஆண்டுகளை நினைவூட்டும்.

**- ப.குமாரசாமி,**
**கரூர் மாவட்டத் தலைவர்,**
**திராவிடர் கழகம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கள நிலவரமும், கழகத்தினருக்கு விளக்கமும்!

1957-ஆம் ஆண்டு தேர்தலில், கழகம் பங்குபெறுவதற்கு முன்னர், கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் 'தேர்தல் ஆய்வுக் குழு' அமைக்கப்பட்டது. அந்தக் குழு, 1956 -ஆம் ஆண்டு அக்டோபர் 12-23 வரை, தமிழ்நாடு முழுவதும் மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து, கள நிலவரத்தை அறிக்கையாக பேரறிஞர் அண்ணாவிடம் அளித்து விவாதித்தனர். அந்த அறிக்கை குறித்து, கோகலே மண்டபத்தில் நடைபெற்ற நிதியளிப்புக் கூட்டத்தில் கழகத்தினர் மத்தியில் விரிவாக விளக்கிப் பேசினார் அண்ணா.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900